<u>பத்திரிக்கை குறிப்பு</u>

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தாலுக்கா, ஸ்ரீவிலாசபரம் கிராமத்தைச் சேர்ந்த திரு.ந.இரமேஷ் த/பெ. நரசிம்மன், என்பவர் அவருக்கு சொந்தமான விவசாய நிலத்தில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் அறுவடை செய்யும் காலத்தில் காட்டுப்பன்றிகளால் முற்றிலும் அழிக்கப்பட்டது தொடர்பாக, அதற்கான நஷ்டதொகையை அரசிடமிருந்து பெறுவதற்காக, ஆர்.கே.பேட்டை வனச்சரக அலுவலரிடம் மனு கொடுத்துள்ளார். அதற்கு வன சரக அலுவலர், ஆர்.கே.பேட்டை வேளாண் உதவி இயக்குநருக்கு கடிதம் அனுப்பி, திரு.ரமேஷ் அவர்களின் நிலத்தில் காட்டுப்பன்றிகளால் ஏற்பட்ட நஷ்டத்திற்குண்டான மதிப்பீட்டு சான்று வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க, வேளாண் உதவி இயக்குநர் திரு.ரவி அவர்களை புகார்தாரர் அனுகியபோது, 1.14 ஏக்கர் நிலத்தில் 30 மூட்டைகள் வரவேண்டிய நிலத்தில் 3 மூட்டைகளே கிடைத்ததை தெரிவித்தும், அவர் நிலத்தினை பார்வையிடாமலே, காட்டுப்பன்றிகளால் ஏற்பட்ட சேதார மதிப்பீடாக ரூ.18,000/-ம் போட்டுத்தருவதாகவும், அதற்காக ரூ.2,000/-ம் லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டதற்கிணங்க, இன்று வாதி திரு.ரமேஷ், ஆர்.கே.பேட்டை அலுவலகத்திற்கு சென்று திரு.ரவியை பார்த்தபோது, அவர் ஏற்கெனவே கேட்ட பணத்தை இன்று 31.08.2018-ந்தேதி பகல் 12.30 மணியளவில் கேட்டு வாங்கிக் கொண்டு மதிப்பீட்டு சான்றிதழை கொடுத்தபோது, திரு.ரவி, வேளாண் உதவி இயக்குநர் அவர்களை காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீசாரால் கைது செய்யப்பட்டு விசாரணை மேற்கொணடுள்ளனர்.